மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் எளிதில் அணுகக்கூடிய அளவிற்கு அலுவலகம் இருக்க வேண்டும் என்ற நியாயத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி ஆலோசித்து, வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

225—

சிப்காட் வணிக வளாகம்

***6750—திரு. S. சந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை வட்டத்தில் சிப்காட் வணிக வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை வட்டத்தில் சிப்காட் வணிக வளாகம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. ஆந்திர மாநிலத்தினுடைய வட எல்லையில் உள்ள தொகுதி. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடிய தொகுதி. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய*

2022 மே 5]

பகுதி. தொழில்முனைவோர்கள் வர வாய்ப்பு இருப்பதால், இப்பகுதியினுடைய வளர்ச்சியைக் கருதி, இரா.கி. பேட்டைக்கு தொழிற்பேட்டை கிடைக்குமா, அதற்கான இராஜபாட்டையை இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லா சாலைகளும் ரோமை நோக்கி' என்று சொல்வார்கள். அதைப்போன்று, 'எல்லா சாலைகளும் திருவள்ளூர் மாவட்டத்தை நோக்கி' என்ற வகையில் தொழில் வளர்ச்சியில் இருப்பதைப் போன்ற ஒரு நிலைமை இருக்கிறது. காரணம், 1984 ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை; தொடர்ந்து 2008 ஆம் ஆண்டு தேர்வாய்க்கண்டிகையிலே; 2009 ஆம் ஆண்டு மப்பேட்டிலே; அதற்குப் பிறகு, அதன் தொடர்ச்சியாக, மணலூரில் நிலை I-ல் ஆரம்பித்து, மணலூரில் II ஆம் நிலை தொழிற்பேட்டை என்று வரிசையாக அந்த மாவட்டத்தில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன. இந்த ஆண்டு, அதாவது, 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், புதிதாக ஒரு சிப்காட் தொழிற்பூங்கா திருவள்ளூர் மாவட்டத்தில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் மணலூரில் நிலை III-க்காக நிலம் தேர்வு செய்யக்கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, 1984 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டம் ஒரு முக்கியமான தொழில் கேந்திரமாக உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதைக் காணலாம். பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் தொழில் துவங்க முன்வருகின்றன. பாதுகாப்பு தொழிற்வடத்திலும் ஒரு முக்கியமான முனையமாக பொன்னேரி உருவாகிக்கொண்டிருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் கருத்திற்கொள்கிறபோது, திருத்தணி தொகுதியில் இருக்கக்கூடிய தொழில்முனைவோர்கள் அல்லது அங்கு தொழில் முனையங்கள் தேவைப்படுபவர்கள், நான் குறிப்பிட்டிருக்கக்கூடிய பூங்காக்களில் இருக்கக்கூடிய தொழில் முனையங்கள் மூலமாக தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.

திரு. S. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சுழி அருள்மிகு திருமேனிநாதர் சுவாமி திருக்கோயில் பாடல் பெற்ற சிவஸ்தலங்களின் வரிசையில் பன்னிரெண்டாவது ஸ்தலமாக உள்ளது. இக்கோயிலின் சிறப்பு, இல்லை என்று சொல்லாமல் வரம் கொடுக்கக்கூடிய சிவபெருமான் இருக்கக்கூடிய ஸ்தலமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரன், நீங்கள் அந்த விஷயங்களைப் பற்றி மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம் கேளுங்கள். இப்போது, உங்கள் கேள்விக்கு வாருங்கள். சிப்காட் பற்றி கேளுங்கள்.

திரு. S. சந்திரன்: அதைத்தான் சொல்ல வருகிறேன். சிப்காட் பற்றித்தான் பேச வருகிறேன். எனவே, திருச்சுழியிலிருந்து வந்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இல்லை என்று சொல்லாமல், திருத்தணி தொகுதிக்கு சிப்காட் தொழிற்பேட்டையை அமைத்துத் தருவார்களா என்பதை தங்கள் வாயிலாக மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவார பாடல் பெற்ற ஸ்தலங்களிலே 'பாண்டி 14' என்று சொல்லக்கூடிய ஸ்தலங்களில் திருச்சுழியும் ஒன்று. சுந்தரமூர்த்தி நாயனார் அங்கே பாடினார். 'கவ்வைக் கடல் கதறிக் கொணர்' என்று துவங்கக்கூடிய அவருடைய பதிகம், மிகுந்த பிரசித்தி பெற்ற ஒரு பதிகம் என்பதும் உண்மைதான். அதனால், அவருடைய ஊருக்கும் அந்தச் சிறப்பு இருக்கிறது. திருத்தணியும், அறுபடை வீடுகளிலே முக்கியமான ஒரு வீடு. எனவே, திருச்சுழியிலே இருக்கக்கூடிய திருமேனிநாதர் சுவாமி, திருத்தணியிலே இருக்கக்கூடிய முருகனுடைய ஆணைக்குக் கட்டுப்படக்கூடியவராக இருந்தாலும், தகப்பன் சாமி என்கின்ற பெருமையை முருகன் பெற்றிருந்தாலும், சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, இந்த முறை மாண்புமிகு உறுப்பினர்

2022 மே 5]

அவர்கள், 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்ற வகையில் திருச்சுழி திருமேனிநாதர் சுவாமி சொல்வதை, திருத்தணி முருகன் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள். அடுத்த கடவுள், பழனியிலிருந்து வருகிறார். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள், நீங்கள் தொழில் துறையா அல்லது இந்து சமய அறநிலையத் துறையா என்று கேட்கிறார்கள். (சிரிப்பு)*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தகப்பன் சாமி முருகன் என்று சொன்னார். அந்த முருகன் வீற்றிருக்கின்ற பழனியிலிருந்து என்னுடைய கேள்வி என்னவென்றால், முழுமையாக விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய பழனியிலே ஒரு* SIPCOT *தொழிற்கூடம் அமைக்க நம்முடைய அரசு முன்வர வேண்டும். ஏனென்று சொன்னால், அங்கே தொழில்முனைவோர்கள் மிக ஆர்வமாக இருக்கின்றார்கள். எதிர்வரும் காலத்தில் நம்முடைய அரசு, அங்கே ஒரு* SIPCOT *தொழிற்கூடத்தை அமைக்க முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணியைத் தொடர்ந்து பழனி வருகிறது. அடுத்து, திருச்செந்தூர் என்று வரிசையாக ஒவ்வொரு ஸ்தலமாக வரும் என்று நினைக்கிறேன். திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து அண்ணன் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் தலையாட்டுகிறார்கள். ஆனால், தொழில் மனைகள் அமைப்பதைப் பொறுத்தமட்டில், அதனுடைய தேவைகள் அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலைகளைக் கருத்தில்கொள்ள வேண்டும். ஒரு* SIPCOT *தொழிற்பூங்கா அமைக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய வசதிகள், அதாவது போக்குவரத்து வசதி, நீர் வசதி, மின்சார வசதி போன்ற பல்வேறு வசதிகளைத் தவிர அங்கே இருக்கக்கூடிய தொழில்மனைத் தேவைகளையும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். பழனி, ஒரு*

வளர்ந்து வரக்கூடிய பகுதி என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. விவசாயம் சார்ந்திருக்கக்கூடிய பகுதியாக இருந்தாலும், தொழில் வளம் நிச்சயமாகத் தேவைப்படக்கூடிய ஒரு பகுதி என்பதை மாண்புமிகு உறுப்பினருடன் சேர்ந்து நானும் உணர்ந்திருக்கிறேன். எனவே, வருங்காலங்களிலே திண்டுக்கல் மாவட்டத்திலே ஒரு தொழிற்பூங்காவை உருவாக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும்போது நிச்சயமாக பழனியை நாங்கள் கருத்திலே கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தொகுதிக்கு என்னென்ன வேண்டுமோ அதை உரிமையோடு கேட்க வேண்டும். ஆனால், சம்பந்தமே இல்லாமல் என் பெயரை இழுத்து முருகன் கோயில், முருகன், முருகன் என்றால், என்னைக் கேட்காமல் இது என்ன சமாச்சாரம் என்று தெரியவில்லை. (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

கூடுதல் மின்மாற்றி

***7390—திரு. கு. செல்வபெருந்தகை:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சிவபுரம் ஊராட்சியில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*